**வலல்லாவிட்ட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்புக்கள் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 4,727,197 தொகையான புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 159,356 செலவினத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக் கணக்கிற்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 241,525 தொகையான வட்டி | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | | |
| (iv) | நன்கொடையாகக் கிடைத்த ரூபா 2,000,000 பெறுமதியான கழிவு கம்பெக்டர் ரூபா 2,594,999 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்குரிய கைத்தொழில் உதவித் தொகை ரூபா 2,161,130 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதியப் பணிப்பாளருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,967,535 தொகைக்காக கடன் கொடுத்தோர் நிதியேற்பாடு ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | ரூபா 1,790,650 தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 31,219,253 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 4,145,341 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பீடு செய்து சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட வைப்புப் பதிவேடு மற்றும் பட்டோலை இல்லாமையினால் ரூபா 16,321,132 | பட்டோலைகள் மற்றும் பற்றுச் சீட்டுக்கள் | வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டதுடன் பட்டோலை |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட வேண்டும். | தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் ஆதனவரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | ஆதனவரிக்காக கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மேலும் புதிய ஆதனவரி வலையங்களை ஏற்றுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | - | மெய்மையாய்வின் மூலம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் இனங்காணப்படவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் கண்டறியப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிலையங்கள் தொடர்பாக கண்டறிந்து கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் அதன் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,716,475 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,441,905 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,785,796 | 2,171,699 | 3,039,076 | 1,799,048 | 2,758,628 | 2,763,598 | 2,980,112 | 1,965,705 |
| (ii) | வாடகை | 262,800 | 262,800 | 262,800 | - | 265,200 | 262,800 | 262,800 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 90,000 | 320,679 | 320,679 | - | 90,000 | 247,240 | 247,240 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 63,513,839 | - | 67,872,012 | - | 62,076,002 | - | 69,376,907 | - |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**(அ) வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் 05 வருடங்களை விஞ்சிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,240,591 ஆக இருந்ததுடன், இத்தெபான உப அலுவலகத்திற்குரிய மொத்த ஆதனவரி நிலுவை மீதி ரூபா 1,036,322 ஆகும். அந்த நிலுவை மீதியில் 05 வருடங்களை விஞ்சிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 908,687 தொகை அதாவது 88 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி வருமானம் விரைவான அறவிடப்பட வேண்டும். | பிரதேசத்தில் உள்ளவர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதுவரையில் நிலுவையில் கூடுதலான தொகை அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.3 இறைச்சிக்கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 56,637 தொகையான நிலுவை இறைச்சிக் கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை இறைச்சிக் கடை வருமானம் வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்காக அவர் குடியிருந்து வருகின்ற இடத்தை கண்டறிய முடியாமையினால் அது தொடர்பான உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்து விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் பணம் ரூபா 6,333,533 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,369,135 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்காக மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் 2019 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டண பெறுவனவு ரூபா 6,977,145 ஆகவும் இருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **உப விதிகள்**<br>பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 08 விடயங்களுக்காக மாத்தரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதி விதிக்கப்படாத விடயங்களுக்காக உப விதிக்கப்பட வேண்டும். | தற்போது 08 உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் தேவையான பிரகாரம் எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| (i) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சபையில் 06 வீதிகளின் வீதிப் பிரச்சினைகளை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் ஆண்டின் போது அந்த பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் குறைபாடுகள் சரி செய்யப்பட்டதாகவும் 2018 ஆம் ஆண்டின் போது பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் மேற்கொள்ளப் படாததாகவும் அறவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | வருடாந்த பாதீட்டின் மூலம் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 66,626,770 தொகை வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களின் முறை தொடர்பாக நிதிசார் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் குறைபாடுகள் சரி செய்யப்பட்டதாகவும் 2018 ஆம் ஆண்டின் போது பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் மேற்கொள்ளப் படவில்லை. |

(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | | | |
|---|---|---|---|
| | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,021,447 மற்றும் ரூபா 5,847,778 தொகையான செலவினங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 472 சதவீத அதிகரிப்பாகும். இந்த செலவினங்களை குறைப்பதற்கான பொருத்தமான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | பொருத்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்பட வேண்டும். | கூட்டுப்பசளை உற்பத்தி இயந்திரம் மற்றும் ஹலர் இயந்திரம் பழுதுபார்க்க வேண்டி ஏற்பட்டமையினாலும் கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகள் பரவலாக்கப் பட்டமையாலும் அதற்காக மேலதிகச் செலவினப் பொறுப்பொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திராமையின் காரணமாக வருடாந்த பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக புதிய பூகோள குறிகாட்டிகளில் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார முன்னேற்றம் என்பவற்றுக்கான குறுங்கால மற்றும் நீண்ட காலத் திட்டம் என்பன சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அறிவித்து அதற்கான திட்டமொன்று தயாரித்து அமுல்படுத்தப்பட வேண்டும். | இதுவரையிலும் அதற்குத் தேவையான திட்டத்தினைத் தயாரித்து அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 27 நிறுவனங்களுக்குரிய காலாவதியான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை மீளப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட சுற்றால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 08 நிறுவனங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கும் புதிய அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்களுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூன்றாம் நிலை மட்டத்தில் 01 பதவி, இரண்டாம் நிலை மட்டத்தில் 08 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 11 பதவிகள் என வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இரண்டாம் நிலை மட்டத்தில் 03 பதவிகள் மிகையாகக் காணப்பட்டது. | பதவியணியினரின் மிகைப் பதவிகளை முறைமைப் படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போதுள்ள மொத்த பதவியணியினரையும் மீளாய்வு செய்து சபைக்குத் தேவையான பதவியணியினரைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் மரணமடைந்த, ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 133,123 தொகையான கடன் மீதி அறவிடப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதி துரிதமாக அறவிடப்பட வேண்டும். | கடன் மீதி அறவிட வேண்டிய ஏழு நபர்களில் ஐந்து பேர்கள் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் ஆக இருந்ததுடன் அவர்கள் இடமாற்றலாகிச் சென்ற நிறுவனத்திற்கு அந்த மீதியை தீர்த்து வைக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் இருவரும் ஓய்வூதியக்காரர்களாக இருந்ததுடன் அவர்களிடமிருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமிக்கப்படாமை | | |
| மீளாய்வாண்டிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாதிருந்ததுடன் நிதிக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கொள்வனவு செய்யும் போது அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெறப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 21 செலவின விடயங்களுக்குரிய பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு நூறு சதவீதமும் | வருடாந்த பாதீட்டுத் திட்டம் சாத்தியமானதாக | ஒதுக்கப்பட்டுள்ள செலவின விடயங்களை விட முன்னுரிமை வழங்க |

| | | |
|---|---|---|
| சேமிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டும். | வேண்டிய செலவின விடயங்கள் இனங்காணப்படாமையால் அந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | தற்போது உள்ளகக் கணக்காய்வு விடயத்திற்காக ஏனைய கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**4.3 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.2.1(அ),(இ) மற்றும் (உ) பந்திகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சரிசெய்வதற்கு எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |